2015 செப்டம்பர் 14]

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக அவ்வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எங்களுடைய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்கள் தலைவர் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

248—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

*5245 **திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையால் முடிக்கப்பட்டுள்ளன

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்களின் சொர்க்கமாக தாய்த் தமிழகத்தை உருவாக்கிக் கொடுத்த உத்தமத் தாய்! சட்டத்தின் ஆட்சி நடத்துகின்ற நீதி தேவதை! ரூ.2,42,160 கோடி முதலீடுகளை தாய்த் தமிழகத்திற்குப் பெற்றுக்கொடுத்ததோடு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பக்கம் வங்கக் கடலும், மறுபக்கம் வானம்பார்த்த கரிசல் காடுகளும் நிறைந்த எங்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.67,920 கோடி முதலீடுகளை, அதாவது, நான்கில் ஒரு பகுதி முதலீடுகளை எங்கள் மாவட்டத்திற்கே பெற்றுக்கொடுத்த ஏழரை கோடி தமிழ் மக்களின் முடிசூடிய ராணி, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத்தாரகை, முதலீட்டாளர்கள், தொழிலாளர்கள், விவசாயிகளினுடைய மணிமகுடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

கும்பிட்ட கை விலகும் முன்னே வரம் தரும் வரலட்சுமி; முடிவுகள் இல்லா புத்தம்புது முயற்சிகளைத் தொடர்ந்து, முயற்சிக்க உலக இளைஞர்களையெல்லாம் தன் பக்கம் ஈர்த்திருக்கும் தைரியலட்சுமி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விளாத்திகுளத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடத்திற்காக ரூ.1.68 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்து, அந்தக் கட்டடப் பணியை நிறைவு செய்து, அந்த மக்களுக்கு நல்ல நீதிமன்றக் கட்டடத்தைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு விளாத்திகுளம் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

2015 செப்டம்பர் 14]

என்ற வள்ளுவப் பெருந்தகையினுடைய குறளுக்கேற்ப, எப்போதும் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கமே இருப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விளாத்திகுளம், எட்டையபுரம் மற்றும் ஓட்டப்பிடாரம் ஆகிய இம்மூன்று வட்டங்களுக்கும் ஒருங்கிணைந்த உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் ஒரே வளாகத்தில் இருக்கிறது. அதனைப் பிரித்து, தனியாக உரிமையியல் நீதிமன்றத்தையும், தனியாக குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கிக் கொடுத்திட மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் தூண்களில் முக்கியத் தூணாக விளங்கிக்கொண்டிருக்கும் நீதித் துறையில், நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், புதிய நீதிமன்றங்களையும், நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்துடன் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், நீதிமன்றத்திற்கான புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும், இதுவரை 401 கோடியே 73 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சாதனை படைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கை குறித்து, மாண்புமிகு உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு வரும்பட்சத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இலட்சியத் தலைவி, கடல்கோடி சென்று இந்த நாட்டிற்காக அன்னியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய மீனவர்களுடைய நண்பன், காடு களைந்து கழனி திருத்தி, மேடுபள்ளங்களைச் சமன் செய்திருக்கின்ற விவசாயிகளுடைய உத்தமத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் எடுத்துச் சென்று எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுக்க முடியும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தை சரித்திரத் தமிழகமாக மாற்றிக்கொண்டிருக்கின்ற என் தாய்க்கும் நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

249—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***42374 திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் கிராம ஊராட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றார் அவ்வை*